செய்தி வெளியீடு எண்: 556 நாள் : 15.10.2013

# செய்தி வெளியீடு

சாலைகள் பல்வேறு பகுதிகளை இணைக்கும் அமைப்பு என்று மட்டுமே கருதாமல், அவற்றை மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான தேவைகள் என்ற அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு சீரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்கள் பல இடங்களில் ரயில்வே இருப்புப் பாதைகளை கடந்து செல்ல வேண்டியுள்ளது. சாலை மேம்பாலங்கள் மற்றும் கீழ் பாலங்கள் இல்லாத இடங்களில் வாகனங்கள் ரயில்வே கடவுகளில் அதிக நேரம் காத்திருந்து பயணங்களை தொடர வேண்டியுள்ளதால், பயண நேரம் அதிகமாதல், கால விரயம் ஏற்படுதல், எரிபொருள் விரயம் மற்றும் விபத்துகள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்க இருப்புப்பாதை குறுக்கீடு சாலைகளில் ரயில் மேம்பாலங்கள் மற்றும் கீழ் பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம் ரயில் நிலையம் அருகில், சென்னை-பொன்னேரிகரை-காஞ்சிபுரம் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி-கவரைப்பேட்டை ரயில்நிலையங்களுக்கு இடையில் புதுவயல்-புலிக்கட் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், அத்திப்பட்டு-நந்தியம்பாக்கம் ரயில் நிலையங்களுக்கிடையே நந்தியம்பாக்கத்தில் ஒரு சாலை மேம்பாலம், திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர்-ஆரணி ரயில் நிலையங்களுக்கிடையில் கடலூர்-சித்தூர் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், தண்டரை-திருவண்ணாமலை ரயில் நிலையங்களுக்கிடையில் பாண்டி-கிருஷ்ணகிரி சாலையில் ஒரு சாலை மேம்பாலம், வேலூர் மாவட்டத்தில் வேலூர் கன்டோன்மெண்ட்-கணியம்பாடி ரயில் நிலையங்களுக்கு இடையில் வேலூர்-ஓசூர் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், லத்தேரி-விரிஞ்சிபுரம் ரயில் நிலையங்களுக்கிடையில் T.K.V.Kottah சாலை–விரிஞ்சிபுரம் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், திருச்சி மாவட்டம் காட்டூர்-லால்குடி ரயில் நிலையங்களுக்கிடையில் சிறுதையூர்-செங்கரையூர் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், மஞ்சதிடல் மற்றும் திருவெறும்பூர் ரயில் நிலையங்களுக்கிடையில் கீழகல்கண்டார் கோட்டை சாலையில் ஒரு சாலை மேம்பாலம், திருவாரூர் மாவட்டம் மயிலாடுதுறை-திருவாரூர் பிரிவில் பேரளம் ரயில் நிலையத்திற்கு அருகில் மயிலாடுதுறை-திருவாரூர்-திருத்துறைப்பூண்டி சாலையில் ஒரு சாலை மேம்பாலம், தஞ்சாவூர்-நாகூர் -காரைக்கால் பிரிவில், நீடாமங்கலம் ரயில் நிலையம் அருகில் நாகை-கூடலூர்-மைசூர் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், தஞ்சாவூர்-நாகூர்-காரைக்கால் பிரிவில் குழிக்கரை-திருவாரூர் ரயில் நிலையங்களுக்கிடையில் திருவாரூர்-மன்னார்குடி-முத்துப்பேட்டை சாலையில் ஒரு சாலை மேம்பாலம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகூர்-நாகப்பட்டினம் ரயில் நிலையங்களுக்கிடையில் நாகப்பட்டினம்-அக்கரைப்பேட்டை-வேளாங்கண்ணி சாலையில் ஒரு சாலை மேம்பாலம், விழுப்புரம் மாவட்டத்தில் திருவெண்ணைநல்லூர்-பரிக்கல்

ரயில் நிலையங்களுக்கு இடையில், கடலூர்-சித்தூர் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், கோவை மாவட்டத்தில் சோமனூர்-சூலூர் ரயில் நிலையங்களுக்கிடையில் ராசிப்பாளையம்-தென்னம்பாளையம் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி-வள்ளியூர் ரயில் நிலையங்களுக்கிடையில் நாங்குநேரி-ஏர்வாடி-வள்ளியூர்-விஜயாபதி சாலையில் ஒரு சாலை மேம்பாலம் என 10 மாவட்டங்களில் 16 சாலை மேம்பாலங்களை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். முதற்கட்டமாக இப்பணிகளை செயல்படுத்தும் வகையில் நில எடுப்பு, பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி அமைத்தல், மற்றும் தல ஆய்வு போன்ற ஆரம்பக் கட்ட பணிகளை மேற்கொள்வதற்காக 180 கோடியே 89 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள், தமிழகம் முழுவதும் சீரான போக்குவரத்து நடைபெறுவதற்கு வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
நாள்:- 15.10.2013.